[2nd November 1966

இப்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. மரக்காணத்தில் சில ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருந்ததன் காரணமாக இப்போது ஓரளவு ஒப்புக்கொண்டு புதுக் கட்டடம் வருவது வரை அங்கேயே நடத்திக் கொண்டு வரலாம் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* 334 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு, திரு. எ. சுவாமிதாஸ் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன ?

(இ) டாக்டர்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) இந்த மாநிலத்தில் 1—7—1966-ல் உள்ளபடி, 203 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அவைகளில் 18 நிலையங்களில் டாக்டர்களை நியமித்திருந்தும், 25 நிலையங்களில் டாக்டர்கள் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இருபத்தைந்து நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் எப்படி நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் பக்கத்திலுள்ள ப்ளாக்கிலிருந்து டாக்டர் வந்து அப்போதைக்கப்போது அடிஷனல் சார்ஜாக இருக்கிறார்.

*335 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965 ஏப்ரல் 14-ல் சுகாதார பிரிவில் இருந்து கரம்பக்குடியில் உள்ள சர்க்கார் டிஸ்பென்சரியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான உத்திரவு ஏற்கெனவே பிறப்பித்துவிடப்பட்டுவிட்டது என்ற வந்த உத்திரவை அமல்படுத்தாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement [a] is placed on the Table of the House.

*336 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவேண்டி, அப்பகுதி பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் கோரிக்கைகள் வந்தனவா ?

---

a Printed as Appendix VI on pages 105.